Register No. | | | | | | | | |

**FSB**

**3514–17**

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS, MAY 2017.

(Five Years Regular Course)

Fourth Year — Seventh Semester

LABOUR LAW II

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the doctrine of 'notional extension of time and place of the employer', with the help of decided cases.

'பணி வழங்குநரின் பணியிடம் மற்றும் பணிநேரம் இவற்றைக் கருத்தளவில் விரிவுபடுத்தல்' என்னும் கோட்பாட்டைத் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

https://www.tndaluonline.com

2. Explain the benefits available under the Employee's State Insurance Act 1948.

பணியாளர் அரசுக் காப்பீட்டுச் சட்டம் 1948 -ன் கீழ் கிடைக்கக்கூடிய பலன்கள் யாவை? விளக்குக.

3. Explain the provisions of the Factories Act 1948 relating to Health, Welfare and Safety of the workers.

1948 ஆம் ஆண்டு ஆக்கத் தொழிலக சட்டத்தின் கீழ் பணியாளர்களின் உடல்நலம், நலவாழ்வு மற்றும் பாதுகாப்புக் குறித்த சட்டப்பிரிவுகளை விளக்குக.

4. State the benefits available to a pregnant woman under the Maternity Benefit Act, 1961.

பேறுகால பயன்கள் சட்டம் 1961 ன் கீழ் ஒரு கர்ப்பிணிக்கு வழங்கப்படும் நலன்கள் யாவை?

5. Explain the full bench formula on Bonus.

மீதூதியம் குறித்த முழு ஆய வழிகாட்டுதல் பற்றி விளக்கவும்.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Explain the salient features of the Tamilnadu Shops and Establishment Act 1947?

தமிழ்நாடு கடைகள் மற்றும் பணியாளர் குழாம் சட்டம் 1947 பற்றிய முக்கிய குணயியல்புகளை விளக்குக.



(b) Employment of women and children in factories.

பெண்கள் மற்றும் குழந்தைகளை ஆக்கத்தொழிலக பணியில் அமர்த்துதல்

(c) Occupier of a factory.

ஆக்கத்தொழிலகப் பொறுப்பாளர்.

(d) Explain the scope of the Employee's Provident Funds Act 1952.

1952 ஆம் ஆண்டு பணியாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் நோக்கெல்லையை விளக்குக.

(e) ESI Court.

பணியாளர் அரசுக் காப்பீட்டு நீதிமன்றம்.

(f) Explain the important features of the Payment of Gratuity Act 1972.

1972 ம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் முக்கிய இயல்புகளை விளக்குக.

(g) Occupational disease.

தொழிற்சார்ந்த நோய்.

(h) Kinds of Bonus.

மீதூதிய வகைகள்.

(i) Minimum Bonus and Maximum bonus.

குறும மீதூதியம் மற்றும் பெரும மீதூதியம்

(j) Factory.

ஆக்கத் தொழிலகம்.



https://www.tndaluonline.com

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Mr. Kuppusamy, an Automobile mechanic, employing 20 persons repairs motor cycles and cars all in open space on the road side. To carry out the painting and welding he used a small shed and the electricity. Whether it is a factory? Decide.

   திரு. குப்புசாமி என்ற தானியங்கி பழுது பார்ப்பவர் சாலை ஓரத்தில் 20 பணியாளர்களை பணிக்கு அமர்த்தி இரு சக்கர வாகனம், மகிழுந்து பழுதுபார்க்கும் பணியும், வாகனங்களுக்கு வர்ணம் பூசும் பணியும் புரிந்து வந்தார். அப்பணிகளை மேற்கொள்ள ஒரு சிறு கூரையும், மின்சாரமும் பயன்படுத்தினார். திரு. குப்புசாமியின் இத் தானியங்கியகம் ஆக்கத்தொழிலகம் ஆகுமா? - முடிவு செய்க.

8. A mobile phone factory has a canteen for its workers and a cycle stand run by a contractor. ESI authorities directed the mobile phone employer to pay contributions towards the workers employed in the canteen and cycle stand. But the Employer of the mobile phone factory refused. Examine the liability of the Employer.



ஒரு அலைபேசி ஆக்கத் தொழிலக வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டியகம் மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடம் ஆகியவைகளை ஒரு ஒப்பந்தக்காரர் நடத்தி வந்தார். சிற்றுண்டியகம் மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்காக பங்குத்தொகை செலுத்துமாறு அலைபேசி ஆக்கத்தொழிலகத்தினரை பணியாளர் அரசுக் காப்பீட்டு அலுவலக அதிகாரிகள் பணித்தனர். அலைபேசி ஆக்கத் தொழிலகத்தினர் அதனை மறுதளித்தனர். அலைபேசி ஆக்கத் தொழிலகத்தினரின் கடப்பாட்டினை விளக்குக.

9. Sri Shiva Enterprises is an establishment registered under the Co – operative society's Act. There are 30 workers who are working without the aid of power. Whether the Employees Provident Funds Act is applicable to this establishment decide.

   'ஸ்ரீ சிவா எண்டர்பிரைசஸ்' என்ற பணியாளர் குழாம் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பணியாளர் குழாம் ஆகும். இந்த பணியாளர் குழாமில் 30 பணியாளர்கள் மின் ஆற்றல் உதவியின்றி பணி செய்து வருகிறார்கள். பணியாளர் வைப்பு நிதிச் சட்டம் இந்தப் பணியாளர் குழாமிற்கு பொருந்துமா - முடிவு காண்க.



https://www.tndaluonline.com

10. A laundry was attached with Agathiyar Siddha Medical College and Hospital. Twenty workmen employed in the laundry were engaged in washing clothes used in the Siddha Hospital. Decide whether the laundry is a factory.

அகத்தியர் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனை ஒன்றுடன் சலவையகமும் இணைக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவமனையின் துணிகளைச் சலவை செய்ய 20 சலவைப் பணியாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இச்சலவையகம் ஆக்கத் தொழிலகமா?

11. Murugan is an employee in Balaji Industrial Establishment. He had worked 40 days from April 2013 to March 2014. He claimed Bonus for the year 2013 to 2014 accounting year by stating that he had worked sufficient number of days. Whether he is entitled to get Bonus.

முருகன் என்பவர் பாலாஜி தொழிலகத்தில் பணியாளராக பணி செய்கிறார். அவர் ஏப்ரல் 2013 லிருந்து 2014 மார்ச் மாதம் வரை 40 நாட்கள் வேலை பார்த்து உள்ளதாகக், அந்தநாட்கள் மீதூதியம் கோருவதற்கு போதுமானது எனக். குறிப்பிட்டு 2013-2014 ம் கணக்கு ஆண்டிற்கான மீதூதியம் கோருகிறார். அவர் மீதூதியம் பெறத் தகுதி உடையவரா என்பதைத் தீர்மானிக்கவும்.

12. 'X' is a workman in a textile mill. While working, to avoid stomach pain he took alcohol. He met with an accident and died. The widow of the deceased claimed compensation from the employer. Whether the employer is liable to pay compensation. Decide.



'X' என்ற பணியாளர் ஒரு ஆடையகத்தில் பணி செய்கிறார். அவர் பணியின்பொழுது வயிற்றுவலி குணமடைய மது அருந்துகிறார். அதன் காரணமாக பணியாற்றும் போது விபத்துக்குள்ளாகி இறந்து விடுகிறார். 'X' ன் மனைவி ஆடையகப் பணி வழங்குநர் மீது இழப்பீடு கோரினால் பணிவழங்குநர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரா? முடிவு செய்க.



https://www.tndaluonline.com